**வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (அ) அவதானிப்பு நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மற்றும் 2018 ஆம் ஆண்டில் சபையினால் அபிவிருத்தி ஒதுக்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,432,039 பெறுமதியான 02 மூலதன வேலைகள் மூலதனவாக்கம் செய்யப்படா மையினால் நிதிக் கூற்றுகளில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதன அரசிறைக்கான உதவு தொகை என்பன அத்தொகையினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்தி ஒதுக்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பின்வரும் 02 மூலதன வேலைகள் ரூபா 2,932,039 பெறுமதியானது 2022 இறுதிக்கணக்கில் நாட்குறிப்பின் மூலம் சேர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் அபிவிருத்தி ஒதுக்கத்தினைப் பயன்படுத்தி ரூபா 500,000.00 பெறுமதியில் அமைக்கப்பட்ட வதிரி முன்பள்ளி சுற்று மதில் வேலையானது 2022 இறுதிக்கணக்குகளில் நாட்குறிப்பு பதிவு மூலம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையினால் 02 வேலைத்திட்டங்களிற்கான பொருட்கள் கொள்வனவு மற்றும் 11 அபிவிருத்தி வேலைத்திட்டங்களானது வேலைகள் முடிவுறுத்தப்படாத போதிலும் சபையினால் கேள்வி கோரல்கள் மற்றும் மதிப்பீட்டு தொகையின் அடிப்படையில் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் செலவினங்கள் மற்றும் நடப்பு பொறுப்புக்கள் ரூபா 31,451,311 நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட 11 வேலைகளும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த தொகையே சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. வேலைகள் நிறைவடைந்ததும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். பிரதேசசபைகளில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் வருட இறுதியில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட தொகைகள் வேலை முடிவடைந்த பின்னர் அவர்களுக்கு வழங்குவதற்காக சில்லறைக்கடன்கொடுத்தோர் கணக்கில் வைக்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்காக 2022 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 1,550,564 நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் கடன் மூலதனத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்பதனால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பானது குறைத்தும் கடன் மூலதனம் அதிகரித்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்காக 2022 ம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 1,550,564 வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதால் அதனை மூலதன செலவாக கருதி 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது கடன் பெறப்பட்ட ஆண்டிலிருந்து மூலதன செலவாக காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூர் அபிவிருத்தி கடன் தொடர்பாக குறித்த நிறுவனத்தினால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிய உறுதிப்படுத்தப்பட்ட மீதியிலும் பார்க்க நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட மீதியானது ரூபா 268,030 அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தமையால் கடன் மூலதனம் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உள்ளூர் அபிவிருத்தி கடன் ரூபா 268,030 பெறுமதியானது 2007 ஆம் ஆண்டு ஐந்தொகையில் பொறுப்பாக காட்டப்பட்டு வருகின்றது. இத்தொகை சம்பந்தமாக ஏனைய நடவடிக்கைகள் பதிவுகள் சம்பந்தமாக கோவைகள் பதிவேடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை. | குறித்த விடயம் தொடர்பில் உரிய கணக்காய்வுச் சான்று சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் சபையின் நடவடிக்கைகள் தொடர்பான சான்றுகள் சரியாக சபையினால் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 67,899,056 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 54,377,128 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **வீதவரி** | | |
| 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 134 (i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது 1 - 5 வருடங்களாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,670,278 ஆதனவரி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிலுவை வருமானங்களின் வருட ரீதியான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் வீதவரியின் பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் ரூபா 142,171 ஆகக் காணப்பட்ட போதும் ரூபா 112,229 சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற விலை மதிப்பீட்டின் பிரகாரம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் பிரதேசத்திற்குட்பட்ட ஆதனங்களின் மொத்த எண்ணிக்கை 12512 ஆகும். இவ் ஆதனங்களின் மூலம் அறவிடப்படும் வருடத்திற்குரிய ஆதன வரியானது 142,171 ஆகும். இதன் மூலம் வருடம் ஒன்றுக்கு ஒரு ஆதனத்தின் மூலம் கிடைக்கின்ற ஆதன வரியானது ரூபா 1.00 முதல் ரூபா10.00 வரையாகக் காணப்படுகிறது. இனிவரும் காலங்களில் ஆண்டு ரீதியாக வயதுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும் | விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு பெறுமதிக்கு ஏற்ப வீதவரியினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 275,748,864 இனை பயன்படுத்தி அபிவிருத்தித் வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | எமது பிரதேசசபையின் பழைய சந்தைப்பகுதியில் Commercial Complex ஒன்றை ரூபா 328.7 மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு சபையால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க மேற்படி வேலையை குறித்த நிலையான வைப்பிலிருந்து மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சபை நிதிகளினை விரையமின்றி உத்தமமட்டத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| **ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டில் சபையானது பதவி வெறிதாக்கிய மற்றும் ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 05 வருடங்களிற்கு மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 304,500 இடர்கடன் மற்றும் விழா முற்பணம் என்பனவற்றை அறவீடு செய்திருக்கவில்லை. | குறித்த அலுவலர்களில் 02 பேர் பதவி வெறிதாக்கல் செய்யப்பட்டோர் ஆவார். அவர்களின் மீதிகளினை அறவிடுவதற்கு NP/09/A&P/04/12/CIR/2020 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்று நிருபத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏனைய இருவரும் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையினால் அவர்களின் மீதிகளினை பணிக்கொடையிலிருந்து அறவீட்டினை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஓய்வூதிய பணிப்பாளருக்கு PD3 படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கடன் நிலுவையினை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள தாபன விதிக்கோவைகளின் ஏற்பாடுகளிற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |